//நினைவூட்டு –3//
// மிக மிக அவசரம்//

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2145/ஆ5/2023, நாள். 02.08.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையம் – புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது (Inspire Award) 2023–2024ம் ஆண்டிற்கான புதிய பதிவுகள் இணையதள மூலம் விண்ணப்பிக்க தெரிவிக்கப்பட்டது – இது நாள் வரை விண்ணப்பிக்காத பள்ளித் தலைமையாசிரியர்கள் இணையதள மூலம் உடன் விண்ணப்பிக்க தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை
1. சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய செயல் இயக்குநர் (முகூபொ) அவர்களின் கடித எண். 2226/P1/2023, நாள்.22.05.2023 , 23.06.2023, 14.07.2023 மற்றும் 31.07.2023
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 24.05.2023 03.07.2023 மற்றும் 18.07.2023

•••••

2023–2024ம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுகளுக்கான (Inspire Award) புதிய பதிவுகள் மே 1ம் தேதியிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. அதற்காக அனைத்துப் பள்ளிகளில் **6–ம் வகுப்பு முதல் 10–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள்** பதிவு செய்ய வேண்டும் எனவும், இதற்காக www.inspireawards-dt.gov.in என்ற இணையதளம் 2023 மே 1–ம் தேதியிலிருந்து ஆகஸ்ட் 31–ம் தேதி வரை செயல்படும் என 22.05.2023 நாளிட்ட பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இப்பொருள் சார்பாக பார்வையில் 2–ல் காணும் இவ்வலுவலக கடிதங்கள் வாயிலாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

எனவே, இதற்கான பதிவுகளையும், வழிகாட்டு நெறிமுறைகளையும், தெரிந்து கொள்ளவும், பதிவு செய்யவும் இணையதள முகவரி

| |
|---|
| www.inspireawards-dst.gov.in |
| **பதிவு செய்வதற்கான கடைசி நாள். 31.08.2023** |

14.07.2023 அன்றைய நிலவரப்படி வேலூர் மாவட்டத்தில் மிக குறைந்த அளவில் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என பார்வை 1-ல் காணும் சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய செயல் இயக்குநரின் 31.07.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதுநாள் வரை விண்ணப்பிக்காத பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் பணிபுரியும் அறிவியல் பாட ஆசிரியர்கள் மூலமாக பள்ளிக்கு 5 மாணவர்கள் வீதம் தவறாமல் உடனடியாக மேற்காணும் இணையதளத்தில் பதிவுகள் மேற்கொள்ள அனைத்து அரசு / நிதியுதவி/ மெட்ரிக்/ மேல்நிலை/உயர்நிலை/நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. ஆகஸ்ட் 31 வரை விண்ணப்பங்களை இணைய தளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என மீள தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

**பெறுநர்**
தலைமை ஆசிரியர்கள் / தாளாளர்கள்/ முதல்வர்கள்,
அரசு / நிதியுதவி/ மெட்ரிக்/ மேல்நிலை/உயர்நிலை/நடுநிலைப்பள்ளிகள்
வேலூர் மாவட்டம்

**நகல்**

1. செயல் இயக்குநர் (முகூபொ) ,
   தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்,
   சென்னை – 600 025.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் /தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (இப்பொருள் சார்பாக தனிகவனம் செலுத்தி தொடர் நடவடிக்கை
   மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.)